கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.எஸ்.நாகராஜன், எம்.எல்,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 455/2019** **நாள்:09.12.2022**

**வா.சா.1:**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கே.நடராஜன் | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் வாதி. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். 18.3.2015 அன்று நானும் பிரதிவாதி ஸ்ரீமதி என்பவரும் தாவா சொத்தை பொறுத்து பதிவு செய்து கொண்ட கிரைய பத்திரத்தின் அசலை ஒப்படைக்கிறேன். அது **வாசாஆ.1.** 13.04.2016 தேதியில் பிரதிவாதி பகுதி கிரைய தொகையாக ரூ.7,00,000/– செலுத்தியுள்ளார். அதற்கான வரைவு மேற்படி வாசாஆ.1 ஆவணத்தில் பின்புறம் எழுதப்பட்டுள்ளது. அந்த வரைவு **வாசாஆ.2.** 17.09.2016 அன்று பகுதி கிரைய தொகையாக 3,50,000/– செலுத்தியுள்ளார். அதற்கான வரைவு மேற்படி வாசாஆ.1 ஆவணத்தில் பின்புறம் எழுதப்பட்டுள்ளது. அந்த வரைவு **வாசாஆ.3**. 08.02.2015 தேதியிட்ட வில்லங்க சான்றை ஒப்படைக்கிறேன். அது **வாசாஆ.4.** 09.11.2016 அன்று நான் அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் **வாசாஆ.5**. அதை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை **வாசாஆ.6**. 10.11.2016 அன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் காத்திருந்தேன் என்பதற்கு அடையாளமாக ஒரு ஜெயபிரகாஸ் என்பவர் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டு்ள்ளேன். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல்

**வாசாஆ.7.** 15.11.2016 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் **வாசாஆ.8.** பாக்கி கிரைய தொகையான ரூ.1,50,000/- ஐ நீதிமன்றம் உத்தரவின் பேரில் வைப்பீடு செய்ய தயாராக உள்ளேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஒப்பம்./**எஸ்.நாகராஜன்**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.(பொறுப்பு)